

மு.சங்கர்

மு.சங்கர், 22.5.1973இல் சிலாங்கூர், பூச்சோங்கிலுள்ள சீபீல்டு தோட்டத்தில் பிறந்தார். தந்தையார் பெயர் திரு.முனிசாமி, தாயார் திருமதி. சேவாத்தாள். சீபீல்டு தோட்டத் தமிழ்ப்பள்ளியில் 4ஆம் வகுப்பு வரை பயின்று, பின்னர் 5ஆம் வகுப்பை எமரால்டு தமிழ்ப்பள்ளியிலும், 6ஆம் வகுப்பை சிம்பாங்லீமா தமிழ்ப்பள்ளியிலும் பயின்றார். 1999ஆம் ஆண்டு, பினாங்கு, மலேசிய அறிவியல் பல்கலைக்கழகத்தில் வேதியியலில் இளநிலை பட்டம் பெற்றார். 2011ஆம் ஆண்டில் கோலாலம்பூர் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார். தற்போது அப்பல்கலைக்கழகத்திலேயே முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டிருக்கிறார். 2005இல் காவேரியம்மாளைக் கரம் பற்றி இல்லறத்தைத் தொடங்கிய இவருக்கு அந்த நல்லறத்தின் பயனாக, கோமகள், தமிழ்மாறன் என இரண்டு செல்வங்கள் உள்ளனர். இரசாயன நிபுணராகப் பணியைத் தொடங்கிய இவர், 2001இல் மலேசிய வானொலியில் ஒலிபரப்பாளராக இணைந்தார். தற்போது, மலேசிய வானொலி தமிழ் செய்திப் பிரிவில் செய்தியாளராகப் பணியாற்றி வருகிறார். சாவிலும் தமிழ் படித்துச் சாகவேண்டும், தன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டுமென்பதே இவரது அவா.

001918



# சங்கநதிபூ. அருணாசலம்

மலேசியாவில் அதிகக் கதை எழுதியவர்களின் பட்டியலில் சேரக்கூடிய இவரின் பெயரை எந்த ஒரு வாசகரும் மறந்துவிட முடியாது. அன்று எந்த வேகத்தில் எழுத ஆரம்பித்தாரோ அந்த வேகத்தில் இன்றும் எழுதி வருகிறார்.

■ மு.சங்கர் ■

**Editorial Team**

Dr. Aranga.Pari
Dr. Pa.Su. Moovendan
Dr. J. Raja

Dr. R. Mohana Dass
Dr. S. Kumaran
Dr. Krishanan Maniam

Dr. Oppila Mathivanan
Dr. Apitha Sabapathi

₹ 53.00

**SanganathiPoo. Arunachalam**

by

**M. Sankar**

First Edition 2015

**Published by**

Kalaignaan Pathipagam
19, Kannadhasan Salai,
T.Nagar, Chennai - 600 017.
044-24345641, 24313221
email:anuragam78@gmail.com

**Designed by**

Satyan layout, Chennai - 600 005.
044-42663451

**Printed at**

M.K. Offset, Chennai.

# பதிப்பாசிரியர்கள் உரை

நீண்ட பாரம்பரியமும், தொன்மையான மரபும் மிக்க மொழி தமிழ். இலக்கிய, இலக்கண வளமை பெற்ற அம்மொழியில் எண்ணுதற்கு அரிய சான்றோர் பெருமக்கள் சிறப்பான தொண்டாற்றியுள்ளனர். தமிழ் மொழியின் ஆழம் அறிந்து, தம் புலமையால் சிறப்பாகப் பணியாற்றியும், தம் புகழ் நிறுவியும் சென்றவர்கள் தமிழறிஞர்கள்.

அந்தப் புலமை மரபு மறைந்து விடவில்லை. தமிழறிஞர்களின் மரபு இன்னும் உயிர்ப்புடன் உலா வந்து கொண்டிருக்கிறது.

வாழ்ந்த, வாழும் தமிழறிஞர்களின் சிறப்புமிக்க பணியினை ஒரு வரலாற்று ஆவணமாகப் பதிவு செய்தால், அதனை இன்றைய மாணவருலகம் அறிந்துகொள்ளும் என்ற நோக்கில், அப்படிப்பட்டோரின் வாழ்வும் பணியும் பற்றிய தகவல்களை நூல் வடிவமாகக் கொணர்ந்துள்ளோம்.

தமிழறிஞர்களை கௌரவப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலும், இத்திட்டத்தை விரிவுபடுத்தி, தமிழ் படைப் பாளிகளையும் அவர்தம் படைப்புகளையும் சிறப்பிக்கும் வகையில் நூல்வடிவம் ஆக்கியுள்ளோம்.

தமிழுக்குத் தொண்டாற்றிய அண்ணாமலைப் பல் கலைக்கழகமும், மூன்று முறை உலகத் தமிழ் மாநாடு நடத்திய மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும், வைர விழாக் காணும் சென்னை கலைஞன் பதிப்பகத்துடன் இணைந்து மீண்டும் செயல்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

முனைவர் அரங்க. பாரி
முனைவர் ப.சு. மூவேந்தன்
முனைவர் ஜா. இராஜா

முனைவர் ஆர்.மோகனதாஸ்
முனைவர் எஸ்.குமரன்
முனைவர் கிருஷ்ணன் மணியம்

முனைவர் ஒப்பிலா. மதிவாணன்
முனைவர் அபிதா சபாபதி

